# இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன். மூன்றாம் நாளிலே, நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய். 2 இரா 20 : 5

**உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்.**
**உன் கண்ணீரைக் கண்டேன்.**

தேவனுடைய ஆலயத்திற்கு போக முடியவில்லையே–என அங்கலாய்க்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்**
**உன் கண்ணீரைக் கண்டேன்**–என்ற
தேவ வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

அந்நாட்களிலே எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, நீர், உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்க மாட்டீர், மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவாபுறமாக திருப்பிக் கொண்டு, கர்த்தரை நோக்கி, ஆ, கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்.

ஏசாயா பாதி முற்றத்தை விடடு அப்புறம் போகிறதற்கு முன்னே கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு மறுபடியும் உண்டாகி,
நீ திரும்பிப் போய், எசேக்கியாவை நோக்கி, கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்

**உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் உன் கண்ணீரைக் கண்டேன்.**
**இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்.**
**மூன்றாம் நாளிலே, நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய்**
**உன் நாட்களோடே 15 வருஷம் கூட்டுவேன். இந்த நகரத்திற்கு ஆதரவாய் இருப்பேன்.**

பின்பு ஏசாயா, அத்திப்பழத்து அடையைக் கொண்டு வாருங்கள் என்றான். அதை அவர்கள் கொண்டு வந்து பிளவையின்மேல் பற்று போட்டபோது, அவன் பிழைத்தான்.

எசேக்கியா, ஏசாயா தீர்க்கதரிசியை நோக்கி கர்த்தர் என்னை குணமாக்குவதற்கும், மூன்றாம் நாளிலே நான் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவதற்கும் அடையாளம் என்ன என்றான்.

அதற்கு ஏசாயா, (கடிகாரம் 10 நிமிடம்) முன்னிட்டு போக வேண்டுமோ அல்லது (10 நிமிடம்) பின்னிட்டு போக வேண்டுமோ என்று கேட்டான். அதற்கு எசேக்கியா சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போகிறது லேசான காரியம். அப்படி வேண்டாம். சாயை 10–பாகை பின்னிட்டுத் திரும்ப வேண்டும் என்றான்.

அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி, கர்த்தரை நோக்கி கூப்பிடுகையில் அவர் சூரிய கடிகாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப் பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார் அல்லேலூயா.

என் அன்பு சகோதரனே, சகோதரியே உன் உண்மையையும், உத்தமத்தையும், நலமான செய்கையையும் தேவன் அறிவார். உன் விண்ணப்பத்தைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார். உன் கண்ணீரை பார்த்துக் கொண்டே இருக்கிறார். மேலும் கண்ணீரை வார்த்து துருத்தியில் வைத்துக் கொண்டே இருக்கிறார்.

**நிச்சயமாக உன்னைக் குணமாக்குவார்.**
**நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய்**
**பக்தன் பாடுகிறார்**

அவரை நோக்கி கூப்பிடும் வேளை, அறிவிப்பாரே அற்புதங்கள்,
எனக்கெட்டாத அறிந்திடலாகா, எத்தனையோ பதிலளித்தார்.
தேவ கிருபை எங்கும் பெருக, தேவனை ஸ்தோத்தரிப்போம்.
பாவ இருள் அகல, தேவ ஒளி அடைந்தோம்.–என்பதாக

ஆம், சகோதரனே, சகோதரியே,
இந்த மாதம் மேற்கண்ட பாடலை அடிக்கடி பாடுங்கள், பாடிக் கொண்டே இருங்கள்.
படுக்கையில் இருக்கும் என் தாயாரே,
பாடுங்கள். பாடி பரவசமடையுங்கள்.

**இதோ, நான் உன்னை குணமாக்குவேன்**
**மூன்றாம் நாளிலே, நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய்.** ஆமென்.